

நெல்லை மாவட்டம் செட்டிகுளம் ரெத்தினம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு 5 நடமாடும் கால்நடை மருத்துவமனை வாகனங்களுக்கான சாவினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு ஓட்டுநர்களிடம் வழங்கினார். உடன் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் ரிச்சர்ட் ராஜ் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் பாஸ்கர் உள்பட பலர் உள்ளனர்.




சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில், நேற்று முன்தினம் (28.08.2024) நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றை செயல்படுத்துதல் தொடர்பாக, அனைத்து தலைமைப் பொறியாளர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷ மஹாஜன், திருமதி. கு. இந்திராணி, இயக்குநர்/பகிர்மானம் (மு.கூ.பொ) மற்றும் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் - தேனி சாலையில்

# சீவல்சரகு பகுதியில் தொழிலாளர் நல மருத்துவமனை அமைக்கப்படும்-

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி



திண்டுக்கல், ஆக.30-

திண்டுக்கல் தேனி சாலையில் சீவல்சரகு பகுதியில் தொழிலாளர் நல மருத்துவமனை அமைக்கப்படும் என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்ததோடு திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் ஆத்தூர் தொகுதியில் இரண்டு கல்லூரிகள் மற்றும் நவீன வசதியுடன் கூடிய தொழிலாளர் நல மருத்துவமனை அமைகிறது என அமைச்சர் ஐ. பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் நலத்திட்ட பணிகளை துவக்கி வைத்த பின்பு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிடமாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் குடிதண்ணீர்; பிரச்சினைக்குத் நிரந்தர தீர்வுகான ரூ.2ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். வைகை அணையிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர்; கொண்டுவரப்பட்டு வழியோர கிராமங்களான நிலக்கோட்டை மற்றும் அருகில் உள்ள பேரூராட்சிகள், சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி அதன் பின்பு திண்டுக்கல் வரை குடிதண்ணீர் கொண்டுவர திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் திண்டுக்கல் மாநகராட்சியின் குடிதண்ணீர்; பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண்பதோடு தினசரி குடி தண்ணீர் கிடைக்கும் நிலைமை உருவாகும் என்றார். ஆத்தூர் தொகுதியில் உள்ள ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பகுதியில் வசிக்கும் கிராமப்புற மாணவர்களின் நலன் கருதி இரண்டு கல்லூரிகள் கொண்டுவரப்பட்டதால் கடந்த 3ஆண்டுகளாக ஒரு ரூபாய் கூட செலவில்லாமல் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என்றார்.

நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியர் மொ.ந. பூங்கொடி, திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் பிலால்உசேன், ஆத்தூர் மார்கிரேட்மேரி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார் நத்தம் முருகேசன், ஆத்தூர் தாசில்தார் வடிவேல்முருகன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, அருள்கலாவதி,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மனலூர் மணிகண்டன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், திமுக நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் குமரேசன், துணை அமைப்பாளர்கள் பஞ்சம்பட்டி மணி, விவே கானந்தன், விடுதலை முருகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் பத்மாவதி ராஜகணேஷ், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் சிவக்குமார், துணைச்செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், பொருளாளர் கருப்பையா,

மாவட்ட பிரதிநிதி தங்கவேல், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், வீரக்கல் காங்கேயன், ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் பாறைப்பட்டி முருகன், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், பேரூர் கழக செயலாளர் சின்னாளபட்டி மோகன்ராஜ், சித்தையன்கோட்டை சக்திவேல், அய்யம்பாளையம் தங்கராஜ், சின்னாள பட்டி பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதி ராஜா,

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் வீரக்கல் காங்கேயன், ஆத்தூர் ராஜகனேஷ், ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, வீரக்கல் செல்விகாங்கேயன், ஜோதி மயில்சாமி, சிந்தா மணிநாகசுந்தரம், பாப்பாத்தி, நாகவள்ளி, ஊராட்சிமன்ற தலைவர்கள் ஆத்தூர் ஐ.ஜம்ரூத் பேகம், செட்டியபட்டி ராஜா, பஞ்சம்பட்டி பாப்பாத்தி நாகராஜன், அம்பாத்துரை சேகர், பிள்ளை யார் நத்தம் உலகநாதன், வீரக்கல் ராஜேஸ்வரி தங்கவேல், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், அரசு ஒப்பந்தகாரார் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ள

# முதல்வர் மு.க.ஸ்டாலினை வாழ்த்தி மகிழ்கிறோம்!

## டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக 30-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ்.,(ஆர்த்தோ) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், மாநில துணைச் செயலாளர்கள் இரா.அன்வர்கான், நூருல்லா, ஜோசப்ராஜ், விஜயகுமார், முனைவர் ஜான், அடையாறு ஷபீல், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, கா.ரஃபி அகமது, மு.ஷாகுல் அமீது மேலும் அனைத்து மாவட்ட மற்றும் மாநகர் அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் இந்தியாவின் அரசியலை கோபாலபுரத்தில் இருந்து தீர்மானித்த தன்னிகரில்லா தலைவர்; தாய்த்தமிழ்நாட்டின் வளர்ச்சியை தன் பொற்கால ஆட்சியில் கட்டமைத்த நவீன தமிழ்நாட்டின் சிற்பி; உயர்தனிச் செம்மொழி கண்ட நாயகர்; முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை அகிலம் வியக்க கொண்டாடி சரித்திரம் படைத்த தமிழ்நாடு முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும் சிறுபான்மையின மக்களின் உரத்த குரலாக; தாழ்ந்து கிடந்த தமிழ்நாட்டை தனிப்பெரும் சாதனைகளில் கட்டமைத்து உயர்த்திட்ட திருக்குவளை நாயகர்; உலகில் வேறெந்த தலைவருக்கும் இல்லாத சாதனை சரித்திரத்தை தன்னகத்தே கொண்ட தலைவர் கலைஞர் அவர்களின் புகழை என்றும், என்றென்றும் தமிழர்தம் இல்லமெங்கும்; உள்ளமெங்கும் கொண்டாடி மகிழ்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

**தீர்மானங்கள்**

உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என்ற தாரக மந்திரத்தை தன்னகத்தே கொண்ட உழைப்பின் நாயகர்; கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் முதலீட்டாளர்களின் முதல் முகவரியாய் தமிழ்நாடு மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

எண்ணற்ற தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டின் திசை நோக்கி படையெடுக்க தொடங்கியதற்கு வெளிப்படைத் தன்மை மிகுந்த திராவிட மாடல் அரசே முதற்காரணம்.

அனைத்து துறை வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி, அனைத்து மாவட்டங்கள் வளர்ச்சி, தமிழ்நாட்டில் பரவலான மற்றும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துவதை உறுதி செய்வதை ஒற்றை நோக்கமாக கொண்டு தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 31 லட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது.

மேலும், தொழில் துறையை மட்டுமே நம்பியுள்ள சிறுபான்மையின மக்களின் வாழ்வாதாரம் இன்று குறிப்பிடத்தகுந்த வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

எனவே, புத்தொழில்கள் மூலம் சிறுபான்மையின மக்களின் பொருளாதார ஏற்றத்திற்கு வழிவகுத்த முதலமைச்சர் அவர்களுக்கு இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோல், 2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்த வேண்டும் எனும் இலட்சிய இலக்கை நிர்ணயித்து; உயர்தர வேலை வாய்ப்பு மற்றும் உயர்தர முதலீடு ஆகியவற்றை நோக்கமாக கொண்டு முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா செல்லும் திராவிட மாடல் அரசின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களை இக்கூட்டம் வாழ்த்தி வணங்கி மகிழ்கிறது.

ஈரோட்டுப் பகலவன்; பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளை நெஞ்சில் ஏந்தி காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கட்டிக்காத்த திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம் 75 ஆண்டுகளாக மக்களுக்கு பணியாற்றி 2024ம் ஆண்டில் தனது பவள விழா நிறைவினை கொண்டாடுகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு; முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் பட்டை தீட்டப்பட்ட இப்பேரியக்கம்; தற்போது பெரியார் அண்ணா கலைஞர் ஆகியோரின் மொத்த உருவாய் முழுவாய் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் வீறு நடைபோட்டு கொண்டிருக்கிறது.

மக்களுக்கான பணியில் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொடர்ந்து செயலாற்றி வருவதோடு, சிறுபான்மையின மக்களின் பாதுகாவல் அரணாய் காத்து நிற்கும் ஒரே இயக்கம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

எண்ணற்ற சாதனைகள், எண்ணிலடங்கா திட்டங்களுக்கு காரணமான தி.மு.கழகத்தின் 75ஆண்டு பவள விழா நிறைவினை கொண்டாடும் வகையில் கழகத்தின் சார்பில் வருகிற செப்டம்பர் தலைநகர் சென்னையில் நடைபெறும் எழுச்சி மிகுந்த விழாவில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் அனைவரும் திரளாக பங்கேற்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

சகோதரத்துவத்தை, சமத்துவத்தை நேரடியாக சிதைக்கும் ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து கொண்டு வரும் சிறுபான்மையினர் விரோத சட்டங்களில் புதிதாக கொண்டுவந்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை இக்கூட்டம் கடுமையாக எதிர்க்கிறது.

கூட்டாட்சித் தத்துவத்தை சிதைக்கும் சிறுபான்மையினருக்கு எதிரான இந்த சட்டத் திருத்தத்தை ஒன்றிய அரசு முழுவதுமாக ரத்து செய்ய வேண்டுமென வலியுறுத்துவதோடு, சிறுபான்மையினரின் தோளோடு தோள் நின்று அரவணைத்துக் காத்திடும் கழகத் தலைவர் அவர்களின் வழியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தொடர்ந்து குரல் கொடுக்கும்.

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் மற்றும் பல்வேறு கழக ஆக்கப்பணிகளுக்காக கழகத் தலைவர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு கழக சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் ஒன்றியம், நகரம், பகுதி, மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் நியமனம் செய்தல்; சிறுபான்மையின பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பை உறுதி செய்திடும் பொருட்டு அதிகளவில் அவர்களுக்கான வாய்ப்பினை ஏற்படுத்துதல் உள்ளிட்ட தீர்மான ங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### கலைஞரின் வழியில் திராவிட மாடல் அரசு நடத்தும் முதல்வருக்கு வருகிற

# சட்டமன்றத் தேர்தலில் 200 இடங்களுக்குமேல் வென்றிட உழைப்போம்!

## வேலூர் மாவட்ட தொலைத் தொடர்பு துறை எஸ்.சி., எஸ்.டி. சம்மேளன முன்னாள் செயலாளர் பொன்.சேகரன் அறிக்கை!



வேலூர், ஆக. 30-

வேலூர் மாவட்ட தொலைத் தொடர்பு துறை எஸ்.சி., எஸ்.டி., சம்மேளன முன்னாள் செயலாளர் பொன்.சேகரன் விடுத்துள்ள அறிக்கையில், முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசை நடத்தும் முதல்வருக்கு வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றிகளைப் பெற உறுதுணையாக உழைப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

முன்னாள் முதலமைச்சர், இலக்கிய சோலை திரையுலக முத்திரை, தனிநலங்கருதா பொதுநலம், சீர்திருத்த செம்மல், போன்ற எண்ணற்ற கொள்கைகாரார், முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்களை நாகரீகமற்ற முறையில் கைது செய்ததை கண்டித்து அகில இந்திய அஞ்சல் மற்றும் தொலை தொடர்பு துறை SC/ST சம்மேளன . வேலூர் வேலூர் மாவட்ட செயலாளர் பொன்.சேகரன் மற்றும் அங்கத்தினர்கள் அனைவரும் சேர்ந்து *'We strongly condemn the uncultured arrest of former Chief Minister Thiru. Kalaizar Karunanidi. Pray Intervene. P.Segaran District Secretary, Members of Telecom SC/ST federation Vellore"* என்று சென்ற 30.06.2001ம் நாள் குடியரசு தலைவர், பிரதம மந்திரி, ஒன்றிய உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு, கோடான கோடி தொண்டர்களில் கடைசி தொண்டனாக இருந்து அனுப்பிய தந்தியின் "உண்மை நகல்" *'Certified True Copy'* இது எனக்கு கிடைத்த பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறேன்.

மேற்கூறிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கேவலமான கைது நடவடிக்கை தொடர்பாக நடந்த நீதிமன்ற விசாரணையில், விசாரணை நடத்திய அவரது பெயர் நீதியரசன் அசோக்குமார் என நினைக்கின்றேன். (இவர் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி ஏற்கும் முன் கோவையில் *Labour court Judge* ஆக பதவி வகித்தவர்) நீதியரசர் அவர்கள் "முதலமைச்சராக பதவி வகித்தவர் அவரை நடுவீதியில் உட்கார வைத்திருப்பதுதான் அவருக்கு கொடுக்கும் மரியாதையா? இது போன்றுதான் நடத்துவீர்களா? என்று வழக்கில் ஆஜரான அரசு வழக்கறிஞர், மற்றும் காவல்துறை அதிகாரியினரை பார்த்து நீதியரசர் அவர்கள் எழுப்பிய கேள்வி, கைது செய்ய ஆணையிட்ட அராஜக நெஞ்சில் பாய்ந்த மிக, மிக கூர்மையான ஈட்டிமுனை வார்த்தைகள்" என்று அன்றைய கைது நடவடிக்கையின் வேதனையில ஒரு சிறு ஆறுதல் அடைந்தேன்.

தற்போது 2024ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் திராவிட மாடல் ஆட்சியின் தளகர்த்தா, திக்கெட்டும் திராவிட மாடல் ஆட்சியின் கொடிபறக்க உறக்கமின்றி உழைத்து வரும் தலைவர் எத்தனை புது, புது ஆட்சிகள்

தோன்றினாலும், தமிழ்நாட்டு மக்களை திராவிட மாடல் ஆட்சியிலிருந்து திசை திருப்ப முடியாமல் 40க்கு 40 என்ற வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் பலநேரங்களில் நிரூபித்தது போல் வருகின்ற 2026ல் நடக்கும் மாநில தேர்தலிலும் 200க்கும் குறையாத வெற்றியை தமிழ்நாட்டின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களில் ஒப்படைத்து, அகில இந்திய அளவிலும் INDIA கூட்டணியில் 400க்கும் குறையாமல் வெற்றி பெற்று நமது இந்தியாவின் ஜனநாயத்தையும் காப்பாற்றி கலைஞரின் நினைவிடத்தில் சமர்பிக்க உறுதி ஏற்போம்.

இவ்வாறு வேலூர் பொன்.சேகரன் தெரிவித்துள்ளார்.



தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ்.,(ஆர்த்தோ) தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், மாநில துணைச் செயலாளர்கள் இரா.அன்வர்கான், நூருல்லா, ஜோசப்ராஜ், விஜயகுமார், முனைவர் ஜான், அடையாறு ஷபீல் , என்.பி.எம்.ஷேக் அப்துல்லா,கா.ரஃபி அகமது, மு.ஷாகுல் அமீது மேலும் அனைத்து மாவட்ட மற்றும் மாநகர் அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.




தேனி வடக்கு மாவட்டம் போடி தெற்கு ஒன்றியம் சார்பாக பொது உறுப்பினர்கள் கூட்டம் சிலமலை தனியார் மண்டபத்தில் ஒன்றிய அவைத் தலைவர் பாண்டுரங்கன் தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கத்தமிழ்ச்செல்வன் எம்.பி. நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். உடன் தெற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. லட்சுமணன் முன்னிலை வகித்தார். உடன் மாவட்டப் பொருளாளர் சுரேஷ், மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில் முருகன், கண்ணன் பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜா ரமேஷ். முல்லை சேகர் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.